## கால்நடைகள் மீதான ஜ்ஸகாத்

இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

**وَالَّذِي نَفْسِي بِيَدِهِ مَا مِنْ رَجُلٍ تَكُونُ لَهُ إِبِلٌ، أَوْ بَقَرٌ، أَوْ غَنَمٌ، لاَ يُؤَدِّي حَقَّهَا، إِلَّا أُتِيَ بِهَا يَوْمَ الْقِيَامَةِ، أَعْظَمَ مَا تَكُونُ وَأَسْمَنَهُ تَطَؤُهُ بِأَخْفَافِهَا، وَتَنْطَحُهُ بِقُرُونِهَا، كُلَّمَا جَازَتْ أُخْرَاهَا رُدَّتْ عَلَيْهِ أُولاَهَا، حَتَّى يُقْضَى بَيْنَ النَّاسِ (متفق عليه)**

*பொருள்: யாருடைய கையில் என்னுடைய உயிர் இருக்கின்றதோ அவன் மீது சத்தியமாக, எவர் ஒருவரிடத்தில் ஒட்டகங்கள், பசுக்கள் மற்றும் ஆடுகள் இருக்கின்றனவோ, அவர்கள் அதன்மீது கடமையான ஜ்ஸகாத் செலுத்தவில்லையானால், அந்தக் கால்நடைகள் அனைத்தும் மறுமை நாளன்று கொண்டுவரப்படும், அவை கொழுத்துப் பருமனானவையாக இருக்கும், அந்தப் பிராணிகள் அனைத்துமே அவற்றினுடைய உரிமையாளனான அம்மனிதனைத் தங்களுடைய கால்களால் மிதித்தும் தங்கள் கொம்புகளால் குத்திக்கொண்டும் இருக்கும். இந்தக் கால்நடைகள் கூட்டம் கூட்டமாகாக ஒன்றன்பின் ஒன்றாக இவ்வாறாகவே செய்துகொண்டிருக்கும், எதுவரை என்றால் அனைத்து மக்களுடைய கேள்வி கணக்கும் கேட்கப்பட்டு முடிந்துவிட்டிருக்கும்* **(متفق عليه)**.

**ஒட்டகம், பசு மற்றும் ஆடுகளுக்கான ஜ்ஸகாத்தின் நிஸாப், அளவு மற்றும் அதன் விதிகள்:**

1 இவற்றின்மீது ஒரு ஆண்டு காலம் ஆகியிருக்கவேண்டும்

2 அவை புல்வெளிகள் மற்றும் காடுகளில் மேய்க்கப்படுபவையாக இருக்கவேண்டும். அவை விலைக்கு வாங்கப்பட்டு வீடுகளில் தீனி போட்டு வளர்க்கப்படுபவையாக இருக்கக்கூடாது.

3 அவற்றின் எண்ணிக்கை நிஸாப் அளவிற்கு இருக்கவேண்டும்.

**நிஸாப்**

**ஒட்டகங்கள்:** ஒட்டகங்களின் எண்ணிக்கை நான்கு இருக்குமானால் அதன் மீது ஜ்ஸகாத் கிடையாது. அவற்றின் எண்ணிக்கை ஐந்து அல்லது அதற்கு மேலாக ஆகிவிடுமானால் ஜ்ஸகாத் கொடுக்கவேண்டும், ஒட்டகங்களின் எண்ணிக்கை கூடக்கூட அதற்கான ஜ்ஸகாத்தின் அளவு கீழ்க்காணும் வகையில் இருக்கும்.

www.uzairfalahi.com

**5 முதல் 9 வரையிலான** ஒட்டகங்களின்மீது **ஒரு** ஆடு (ஒரு வயதுடைய ஆரோக்கியமான, ஊனமற்ற ஆடு)
**10 முதல் 14 வரையிலான** ஒட்டகங்களின்மீது **இரண்டு** ஆடுகள் (ஒரு வயதுடைய ஆரோக்கியமான, ஊனமில்லாத ஆடுகள்)
**15 முதல் 19 வரையிலான** ஒட்டகங்களின்மீது **மூன்று** ஆடுகள் (ஒரு வயதுடைய ஆரோக்கியமான, ஊனமில்லாத ஆடுகள்)
**20 முதல் 24 வரையிலான** ஒட்டகங்களின்மீது **நான்கு** ஆடுகள் (ஒரு வயதுடைய ஆரோக்கியமான, ஊனமற்ற ஆடுகள்)
**25 முதல் 35 வரையிலான** ஒட்டகங்களின்மீது **ஒரு** பெண் அல்லது ஆண் ஒட்டகம் (ஒரு வயதுடையது)
**36 முதல் 45 வரையிலான** ஒட்டகங்களின்மீது **ஒரு** பெண் அல்லது ஆண் ஒட்டகம் (இரண்டு வயதுடையது)
**46 முதல் 60 வரையிலான** ஒட்டகங்களின்மீது **ஒரு** பெண் அல்லது ஆண் ஒட்டகம் (மூன்று வயதுடையது)
**61 முதல் 75 வரையிலான** ஒட்டகங்களின்மீது **ஒரு** பெண் அல்லது ஆண் ஒட்டகம் (நான்கு வயதுடையது)
**76 முதல் 90 வரையிலான** ஒட்டகங்களின்மீது **இரண்டு** பெண் ஒட்டகங்கள் (இரண்டு வயதுடையவை)
**91 முதல் 120 வரையிலான** ஒட்டகங்களின்மீது **மூன்று** பெண் ஒட்டகங்கள் (மூன்று வயதுடையவை)

ஒட்டகங்களின் எண்ணிக்கை 120 ஐக் கடந்துவிடும் நிலையில், ஒவ்வொரு கூடுதல் 40 ஒட்டகங்களுக்கும் இரண்டு வயதுடைய ஒரு பெண் ஒட்டகமும், ஒவ்வொரு கூடுதல் 50 ஒட்டகங்களுக்கும் மூன்று வயதுடைய ஒரு பெண் ஒட்டகமும் ஜ்ஸகாத்தாகக் கொடுக்கப்படவேண்டும் (புக்ஹாரி, அபூதாவூத், திர்மிதி).

www.uzairfalahi.com

**பசு மாடுகள் மற்றும் எருமை மாடுகளுக்கான ஜ்ஸகாத்**

பசுமாடுகளின் எண்ணிக்கை முப்பதுக்குக் குறைவாக இருக்குமானால் அதன்மீது ஜ்ஸகாத் கிடையாது. அவற்றின் எண்ணிக்கை முப்பது அல்லது அதற்கு மேலாக ஆகிவிடுமானால் ஒரு வயதுடைய காளை அல்லது பெண் கன்றுக்குட்டி ஜ்ஸகாத்தாகக் கொடுக்கவேண்டும். பசுமாடுகளின் எண்ணிக்கை நாற்பதாக இருக்குமானால் இரண்டு வயதுடைய பெண் கன்றுக் குட்டி ஜ்ஸகாத்தாகக் கொடுக்கவேண்டும். அதற்கும் மேலாக இருக்கும் நிலையில், ஒவ்வொரு முப்பது பசுமாடுகளுக்கும் ஒரு வயதுடைய பெண் கன்றுக் குட்டியும் ஒவ்வொரு நாற்பது மாடுகளுக்கும் இரண்டு வயதுடைய பெண் கன்றுக் குட்டியும் ஜ்ஸகாத்தாகக் கொடுக்கவேண்டும். மார்க்கச்

சட்ட அறிஞர்கள் எருமை மாடுகளையும் பசுமாடுகளின் இனத்தைப்போன்றவையே எனக் கருதுகின்றனர்.

**ஆடுகள் மீதகான ஜ்ஸகாத்**

**40 க்குக் குறைவான** ஆடுகளின்மீது ஜ்ஸகாத் கிடையாது.
**40** ஆடுகளாக இருக்குமானால் அதன்மீது ஒரு ஆடு ஜ்ஸகாத் கொடுக்க வேண்டும்.
**40 முதல் 120** ஆடுகள் வரையிலும் ஒரு ஆடு ஜ்ஸகாத் கொடுக்கவேண்டும்.
**121 முதல் 200** ஆடுகள் வரையிலும் **இரண்டு** ஆடுகள் ஜ்ஸகாத் கொடுக்க வேண்டும்.
**201 முதல் 300** ஆடுகள் வரையிலும் **மூன்று** ஆடுகள் ஜ்ஸகாத் கொடுக்க வேண்டும்.
**301 முதல் 400** ஆடுகள் வரையிலும் **நான்கு** ஆடுகள் ஜ்ஸகாத் கொடுக்க வேண்டும்.

ஆடுகளின் எண்ணிக்கை **400** க்கும் அதிகமாக ஆகிவிடும் நிலையில் ஒவ்வொரு **100** ஆடுகளுக்கும் ஒரு ஆடு ஜ்ஸகாத் கொடுக்க வேண்டும்.

இவற்றைத்தவிர மற்ற கால்நடைகள், உதாரணமாக, குதிரைகள், கழுதைகள் ஆகியவறற்றின்மீது ஜ்ஸகாத் கிடையாது. இருப்பினும், அவை வியாபாரத்திற்காக வளர்க்கப்படுமானால், அதற்கான ஜ்ஸகாத் கொடுக்க வேண்டும்.

**புதையல்கள், கனிமங்கள் மீதகான ஜ்ஸகாத்**

முன்பு இருந்தவர்கள் பூமிக்கு அடியில் புதைத்து வைத்திருந்த அனைத்துப் பொருட்களும் புதையல்களில் அடங்கும், அவற்றின் மதிப்பு அதிகமானதாக இருக்குமானால் அது புதையலாகக் கருதப்படும். உதாரணமாக, தங்கம், வெள்ளி, பெட்ரோல் மற்றும் புதையல் பொக்கிஷங்கள் ஆகியன. இதற்கான ஜ்ஸகாத் அதன் மதிப்பின் ஐந்தில் ஒரு பங்கு (அதாவது இருபது சதவீதம்). இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: فِيْ الرِّكَازِ الْخُمُسُ இதனை முஹத்தித்ஸீன்களுடைய ஒரு குழுவினர் அறிவித்திருக்கின்றார்கள், அதாவது, ரிகாஜ்ஸ் (எனப்படும் பூமியில் புதைந்து கிடக்கும் பொருட்கள்)மீது ஐந்தில் ஒரு பங்கு ஜ்ஸகாத் கடமையாகும். பெரும்பாலான மார்க்கச்சட்ட அறிஞர்கள் புதையலாகக் கிடைத்த பொருட்களை மதிப்பிட்டு அதன் அடிப்படையில் கொடுப்பதற்குப்பதிலாக, புதையலில் கிடைத்தப் பொருட்களையே கொடுத்துவிடவேண்டும் என்று கூறுகிறார்கள். ஏனெனில், இறைத்தூதர் ﷺ அவர்கள் அவ்வாறுதான் கூறியுள்ளார்கள். இவ்வகையில், இறைத்



www.uzairfalahi.com

தூதர்ﷺ அவர்கள்ஹஜ்ரத் முஆத்ஜ் (ர) அவர்களை எமன் நாட்டுக்கு அனுப்பி வைத்தபோது கூறினார்கள்: தானியங்களிலிருந்து தானியமும், ஆடுகளிலிருந்து ஆடுகளும், ஒட்டகங்களிலிருந்து ஒட்டகங்களும், பசுமாடுகளிலிருந்து மாடுகளையும் ஜ்ஸகாத்தாகப் பெற்றுக்கொள்ளும்படி அறிவுறுத்தினார்கள்.(அபூ தாவூத், இப்னு மாஜா). இதற்கு மாறாக, ஹனஃபி அறிஞர்களின் கருத்துப்படி அவற்றின் மதிப்பினை அடிப்படையாகக் கொண்டு ஜ்ஸகாத் கொடுப்பது கூடும் என்று கூறுகின்றனர், ஏனெனில், இதில், ஜ்ஸகாத் கொடுப்பவர்களுக்கும் வசதியாக இருக்கும், அதே சமயத்தில் ரொக்கமாகக் கொடுக்கப்படும் நிலையில், அதனைப் பெற்றுக்கொள்பவர்களுக்கும் தங்கள் விருப்பத்திற்கேற்ப செலவழித்துக்கொள்வதற்கும் வசதியாக இருக்கும். இந்த இரண்டு வகையிலும் எதுவாயினும் தவறில்லை என்றே தோன்றுகிறது. ஏனெனில், இதனால் பயன்பெறுவோருடைய நலன்கள்தான் முக்கியத்துவம் பெறுகின்றன, மற்றும் அவர்களுடைய சந்தர்ப்ப சூழ்நிலைகள் வேறுபடவும் செய்கின்றன. ஆகவே, இவ்விஷயத்தில் இதற்கான வழிமுறைகளை ஆய்ந்தறிந்து வகுத்துத்தளிப்பது அறிஞர்களிடமே விட்டுவிடுவதுதான் இதில் சிறந்ததாகும்.

### கடன்களின் மீதகான ஜ்ஸகாத்

ஒரு முஸ்லிம் மற்றவர்களுக்கு நிஸாப் அளவிற்குக் கடன் கொடுத்திருப்பாரேயானால், அதன்மீது ஓராண்டு காலம் கடந்துவிட்ட நிலையில் ஜ்ஸகாத் கொடுப்பது கடன் கொடுத்தவர்மீது கடமையாகும். இருப்பினும், அந்தக் கடன் திருப்பிச்செலுத்தப்பட்டு அவர் கைவசம் வந்தபின்ஜ்ஸகாத் கொடுக்க வேண்டியிருக்கும், அந்தக் கடன் திருப்பிச்செலுத்தப்படவில்லையெனில் அதன்மீது ஜ்ஸகாத் கொடுக்கத்தேவையில்லை, இதுவே, பெரும்பாலான உலமாக்களின் கருத்தாக இருக்கின்றது.

### எந்தப் பொருட்களின் மீது ஜ்ஸகாத் கடமையில்லை

ஒருவரிடம் ஒரு வீடு இருக்கின்றது, அதில் அவர் தங்கியிருக்கின்றார் என்றால், அதன்மீது ஜ்ஸகாத் கொடுக்கத்தேவையில்லை. இதுபோன்றே, ஒருவருடைய சுய தேவைகளுக்கான பொருட்களின்மீதும் ஜ்ஸகாத் கொடுக்கத்தேவையில்லை, உதாரணமாக. துணிமணிகள், வீட்டில் பயன்படுத்தப்படும் பொருட்கள், வாகனங்கள், அழகு அலங்காரப்பொருட்கள் (தங்கம், வெள்ளியைத்தவிர), மற்றும் இயந்திரங்கள், பார்வைக்கான நூல்கள் ஆகியன.

* * *

www.uzairfalahi.com